# அனைத்துலக
# இஸ்லாமியத் தமிழ் இலக்கிய
# எட்டாம் மாநாடு-2014

# சிறப்பு மலர்



## இஸ்லாமிய இலக்கியக் கழகம்


2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
✆ 044-2834 3385

# மலரினுள்ளே...


1. **இஸ்லாமிய இலக்கியக் கழகம் இதுவரை.........** 7

2. **நீயில்லையேல் நானில்லை** (சூஃபிக் கவிதைகள்)
கவிக்கோ அப்துல் ரகுமான் 26

3. **இஸ்லாமும் இசையும்**, நாகூர் ரூமி 28

4. **தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டார் பாடல்கள்**
மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் 35

5. **பீடி சுற்றும் பெண்!** கவிஞர் த.மு.சா.காஜாமுகைதீன், மேலப்பாளையம் 40

6 **இஸ்லாமிய நோக்கில் இன்னிசை** முனைவர் திருமலர் எம்.எம்.மீரான் பிள்ளை 41

7. **ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது,**
கேப்டன் என்.ஏ.அமீர் அலி 45

8. **புலவர் ஆபுதீன்,** தத்துவக்கவிஞர் சி.பதுருத்தீன், 47

9. **அல்குர்ஆன்,** திருவை அப்துர் ரஹ்மான் 50

10. **பாட்டும் பண்பாடும்,** ஒலிச்சித்தர், அரிமா சை. பிச்சை மொஹித்தீன் 51

11. **பாடலாசிரியர் திருவை அப்துர் ரஹ்மான் அவர்களின் வாழ்வும் பணியும்**
பேராசிரியர் அ.மு.அயூப்கான் 57

12. **உயிர்!,** மஸ்கட் மு. பஷீர் 60

13. **கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டுப்புறப் பாடல்களும்**
**- நெய்தல் நிலப்பரப்பும்,** எஸ்.முத்துமீரான் 61

14. **இஸ்லாமிய இன்னிசையும் தமிழகப் பாடகர்களும்!,**
கலைமாமணி இறையன்பன் குத்துஸ் 65

15. **வெளிநாட்டுத் தந்தைக்கு...** பேரா. இரா. முகம்மது ரஃபிக் 68

16. **சூல்தந்த சுடரொளி?** கவிஞர் திட்டச்சேரி அன்வர், 68

17. **ரஹ்மான் என்றொரு பின் நவீன கலைஞன்** எம்.ஜி.சுரேஷ் 69

18. **வலியின்... வார்த்தைகள்!,** கவிஞர் மு. ஹிதாயத்துல்லாஹ், 72

19. **குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களில் இசைக் கூறுகள்,** மு.சுபஸ்ரீ 73

20. **சீறாப்புராணத்தில் இசைக்குறிப்புகள்,** முனைவர் இராஜஸ்ரீ ஸ்ரீபதி 77

21. **மனுஷன்,** தக்கலை ஷலிமா 82

22. **ஹாஜி நாகூர் E.M. ஹனிபா அவர்களின் வாழ்வும் வாக்கும்,** அல்ஹாஜ் ஏ. ஹாஜா முஸ்யித்தீன் ஆலிம் 83

# இஸ்லாமிய இன்னிசையும் தமிழகப் பாடகர்களும்!

– 'கலைமாமணி' இறையன்பன் குத்தூஸ்

இஸ்லாத்தில் இசை அனுமதிக்கப் பட்டதாகும். திருக்குர்ஆன் வசனங்கள் "கிராஅத்" என்னும் இசை தழுவிய ராகத்துடன் ஓதும் வல்லுநர்கள் ஒவ்வொரு வருடமும் பல்வேறு நாடுகளில் கவுரவிக்கப்படுகிறார்கள். இவர்களில் பிரபலமானவர்கள் மக்கா நகரில் வாழும் அப்துர் ரஹ்மான் சுதேசி அவர்களும், எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒரு இசைவாணரும் உலகெங்கும் பாராட்டுப் பெற்றவர்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலேயே ராகத்துடன் பாடும் பாடகர்களையும், கவிஞர்களையும் புகழ்மாலை சூட்டப்பட்டிருக்கிறார்கள் என்பது வரலாறு.

**ஹார்மோனிய சக்கரவர்த்தி காதர் பாட்சா**

தமிழகத்தைப் பொருத்தமட்டிலும் பாடகர்கள் இசையுடன் பாடுவதில் பலர் பிரபலமானவர்களாக திகழ்ந்திருக் கிறார்கள். இப்போது பலர் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக தஞ்சாவூரில் வாழ்ந்த ஆர்மோனியச் சக்கரவர்த்தி என போற்றப்பெற்றவர் காதர்பாட்சா அவர்கள். இவர்களின் வாழ்வில் மறக்க முடியாத ஓர் சம்பவத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**இசையால் தூக்குத் தண்டனை ரத்து!**

அதாவது காதர் பாட்சா அவர்கள் ஒரு வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப் படுகிறார். நீதிபதி அவர்கள் தங்களுடைய இறுதி ஆசை என்ன? என்று வனவினார். அதற்கு காதர்பாட்சா தாம் ஹார்மோனியம் வாசிக்க அனுமதி கேட்டார்! நீதியரசரும் அதற்கு அனுமதி கொடுத்தார். தூக்கு மேடைக்கு முன்பு ஹார்மோனியம் வாசித்தார். அவரது இசையில் அனைவரும் லயித்துவிட்டனர். தூக்குத் தண்டனை நேரம் கடந்துவிட்டதை அனைவரும் மறந்துவிட்டனர். நேரம் தவறி விட்டதால் காதர்பாட்சா அவர்கள் விடுதலை செய்யப்பட்டார் என்பது வரலாற்று உண்மையாகும்!

**கர்நாடக சங்கீத வித்வான் எஸ்.எம்.ஏ. காதிர்**

மற்றொரு இசைவாணரை தமிழகம் மறக்காது. நாகூர் தர்கா ஆஸ்தான வித்வானாக இருப்பவர் வித்வான் எஸ்.எம்.ஏ.காதிர் அவர்கள். இவர்கள் கர்நாடக இசை வேந்தராகத் திகழ்கிறார். 98 வயதைக் கடந்தும் இன்றும் நாகூரிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார். இவரது அன்புச் சீடர்தான் இசைமணி நாகூர் எம்.எம்.யூசுப் ஆவார்.

நாகூர் இசைமணி யூசுப் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

இசைப்பயிற்சி பெற்று கர்நாடக இசையில் "இசைமணி" பட்டம் பெற்ற ஒரே தமிழ் முஸ்லிம் இவரேதான்.

கடந்த காலத்தில் ஜரிகை மடிப்பு சால்வையுடன் கர்நாடக இசை வேந்தராக கும்பகோண எஸ்.டி.சுல்தான் இருந்தார். அவரைப் போன்றே நாகர்கோவிலைச் சார்ந்த ஹுசைன் பாகவதரும், மதுரை ஹுசைன் தீன் அவர்களும் வாழ்ந்தனர்.

**இசை மன்னாதி மன்னர்**
**நாகூர் ஹனீபா**

நாகூர் ஹனீபா ஒரு சகாப்தம் என்றால் மிகையாகாது. திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளில் அவரது வெங்கலக்குரல் ஒலித்தால் - தான் சிறப்படையும், கண்ணியமிகு காயிதேமில்லத், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் வரை அவரைப் பாடச் சொல்லி மகிழ்வதுண்டு. இஸ்லாமிய இன்னிசை வானில் அவர் ஒரு சரித்திர நாயகர் என்றால் மிகையாகாது. தமிழ்நாடு அரசு "கலைமாமணி" விருதுபெற்ற பெருமைக்குரியவர்.

**கஜலும் - கர்நாடக இசையும்**

கலைமாமணி கவிஞர் நாகூர் சலீம் அவர்களால் உருவாக்கப்பட்ட சங்கநாதச் செம்மல் காயல் ஷேக்முஹம்மது, கஜல் வல்லுநர் ராமநாதபுரம் வாஹித், உருது மற்றும் தமிழ் பாடகராகத் திகழ்ந்த அதாஅலி ஆஜாத், ஏ.டி.ஷரீப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கர்நாடக இசையருவி குமரி அபூபக்கரும் குறிப்பிடத்தக்கவர்.

**வலம் வரும் பாடகர்கள்**

மேலும் திருச்சி யூசுப், மறைந்த ஷாஹுல் ஹமீது, அபுல் பரக்காத், ராமநாதபுரம் சீனி முஹம்மது, இ.எச்.ஹனீபா, இ.எம்.பாஷா, இ.எம்.ஜக்கரிய்யா, புதுக்கோட்டை ஹனீபா ஆகியோர் இஸ்லாமியப் பாடகர்களாக வலம் வருகிறார்கள்.

**புலவர் ஆபிதீன் காக்கா பாடல்கள்**
**ஒரு ரிக்கார்ட்**

இசை முரசு நாகூர் எம்.எம். ஹனீபா அண்ணன் அவர்களின் குருநாதராக வாழ்ந்த புலவர் ஆபிதீன் காக்கா அவர்களை தமிழக இஸ்லாமிய உலகம் மறக்க முடியாது.

ஹனீபா அண்ணன் சரித்திரச் சாதனையை உண்டாக்கிய "ஓடிவருகிறான் உதயசூரியன்", "வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததடா" - கொடுத்து கொடுத்துச் சிவந்த கரங்கள் - ஈட்டியின் முன் நிறுத்திட்ட போதிலும் ஈமான் இழக்க மாட்டோம், நில்லுங்கள் நிமிர்ந்து நில்லுங்கள், மக்கத்து மலரே மாணிக்கச் சுடரே - இதுதான் நாங்கள் செய்த தூரோகமா? என்ற இவை அனைத்திற்கும் மகுடம் சூட்டியதுபோல் "இறைவனிடம் கையேந்துங்கள்" என்ற பாடலும் அனைத்து மதத்தினர் நெஞ்சிலும் நீங்காத இடம் பெற்றுவிட்டன. அவர்கள் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்ற பெருமைக்கு உள்ளவர்கள் நாம்!

**ஆஸ்கர் விருது பெற்ற**
**ஏ.ஆர்.ரஹ்மான்**

இன்னிசை வேந்தர், ஆஸ்கர் விருதுபெற்ற ஏ.ஆர்.ரஹ்மான் அவர்களும் தமிழக முஸ்லிம்களைச் சார்ந்தவர் தான். அமெரிக்க மண்ணிலே தலைநிமிர்ந்து எல்லாப் புகழும் இறைவனுக்கே! என்று

தமிழிலே முழுங்கி ஆஸ்கர் விருது பெற்றவர்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏ.ஆர். ரஹ்மானுக்கு தனக்கே உரித்தான வகையில் புகழாரம் சூட்டினார்.

**இசைவானில் நமது பாதை!**

இப்படி தமிழக முஸ்லிம்கள் இன்னிசை உலகிற்கு மேலும் மேலும் பங்களித்துள்ளார்கள். அவர்களின் வரிசையில் அடியேனும் தர்கா நிகழ்ச்சிகள், மீலாது மாநாடுகள், திருமண வைபவங்கள், திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் என தமிழகம் முழுவதும் வலம் வந்து கொண்டிருக்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் அருளால் எமது பாடல்களும் தொலைக்காட்சிகள், ஒலிநாடாக்கள், பலநூற்றுக்கணக்கான வகையில் அவ்வப் போது பதிவு செய்யப்பட்டு வெளியிட்டு வருகிறோம். இசைமுரசு நாகூர் ஹனீபா அண்ணன் அவர்கள் பாடிய அத்தனை ஊர்களிலும் இருந்து அழைப்பை ஏற்று கடமையாற்றி வருகிறோம். தமிழ்நாடு அரசின் கலைமாமணி பட்டமும் பெறுள்ளேன். இது இறைவன் எனக்கு அளித்த அருட்கொடையாகும்.

## முஸ்லிம் தன்னார்வ படை

முதலாம் உலகம் போரின் முதலில் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி துருக்கியில் கலிபாவின் ஆட்சி நீக்கப்பட்டு அங்கு மக்களாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. முஹம்மது நபி (ஸல்) அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கலிபாக்களின் ஆட்சி அகற்றப்பட்டதற்கு பிரிட்டனும் ஒரு காரணம் என்பதால் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த இந்தியத் திருநாட்டின் முஸ்லிம்கள் ஆங்கிலேயக்கு எதிராக 'கிலாபத் புரட்சி'யில் இறங்கினர். அதுகாலை சென்னை மாநகர முஸ்லிம் இளைஞர்கள் ஒன்றினைத்து 'முஸ்லிம் தன்னார்வப் படை'யினை நிறுவனர். அதன் அலுவலகம் இராயப்பேட்டையில் உள்ள ஜானிஜான் கான் தெருவில் அமைந்திருந்தது. அங்கு அவர்கள் அறிவுத்திறனை வளர்க்க நூலகமும் உடற்திறனை வளர்க்க உடற்பயிற்சி மைதானமும் அமைத்து தினசரி உடற்பயிற்சியும் மேற்கொண்டனர். இவ்வியக்க இளைஞர்களைச் சந்தித்து அவர் என்ன முறையில் கிலாபத் போராட்டத்தில் தங்களை இணைக்க உள்ளனர் என்பதை அறிய அன்றைய தினம் முஸ்லிம்கள் மத்தியில் பிரபலமாக இருந்த 'கௌமி ரிப்போர்ட்' என்ற உருது பத்திரிக்கையின் நிறுவரும் ஆசிரியருமான அப்துல் மித் சரார் அவர்கள் எண்ணினார்கள். அவர்களிடம் அளவளாவிய போது அப்துல் ஹாஸிம் ன்ற இளைஞர் அப்துல் மஜீத் சரார் அவர்களிடம், தான் சென்னை மாநகராட்சி அமைந்துள்ள 'ரிப்பன் மாளிகை'யில் அமைந்த ஆவண அறை (Record Room)யை தீயிட்டுக் கொளுத்தப் போவதாக கூறினான். அதற்கு சரார் அவர்கள் அப்துல் ஹாஸிமிடம், "ரிப்பன் கட்டடம் நம்மால் அரசுக்கு செலுத்தப்படும் வரிப்பணத்தில் நிறுவப்பட்டு, நமது சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் பராமரிக்கப்படுவதால் அச்செயல் சமூக விரோத செயல். ஆகவே இளைஞர்கள் பயங்கரவாத செயல்களில் ஈடுபடக் கூடாது" என அறிவுறுத்தி நல்வழிப்படுத்தினார். இதுபோன்ற கடமைமிக்க சமுதாய உணர்வு மிக்க தலைவர்களை கிலாபத் இயக்கம் தந்தது.

- முனைவர் மு. **ஹௌது முகைதீன்**, முதல்வர், ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி, உத்தமபாளையம்.